லாம் என்ற விதிமுறைகளை வைத்திருக்கிறோம். எந்தப் பகுதியில் மக்கள் விரும்புகிறார்களோ அந்தப் பகுதியில் கதர்வாரியத்தின் மூலம் கூட்டுறவுச் சங்கங்களை அமைக்க ஏற்பாடு செய்யப்படும்.

சேலம் மாவட்டத்தில் அரிசனங்களுக்கு வீட்டுமனைகள்.

*264 வின.—திரு. வ. முத்து: மாண்புமிகு அரிசனநல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அரிசனங்களுக்காக சேலம் மாவட்டத்திற்கு வீட்டு மனைக்காக நடப்பு ஆண்டில் ஒதுக்கிய தொகை எவ்வளவு ?

மாண்புமிகு திரு. ந. இராசாங்கம்: ரூபாய் 1.50 லட்சம்.

*265 வின.—திரு. வ. முத்து: மாண்புமிகு அரிசனநல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், திருச்செங்கோடு வட்டத்தில் தாழ்த்தப்பட்டோர் வீடு கட்டும் கழகத்தின் சார்பாக தற்போது எந்த எந்த இடங்களில் வீடுகள் கட்டப்படவிருக்கிறது ?

மாண்புமிகு திரு. ந. இராசாங்கம்: சேலம் மாவட்டம், திருச்செங்கோடு வட்டத்தில், உஞ்சனை கிராமத்தில் வீடுகள் கட்டும் பணியை தனது முதல் கட்ட திட்டத்தில் அரிசன வீட்டுவசதி மேம்பாட்டுக் கழகம் மேற்கொண்டுள்ளது.

திரு. வ. முத்து: தலைவர் அவர்களே, சேலம் மாவட்டத்திற்கு வீட்டு மனைக்காக ஒதுக்கிய தொகை போதாது என்று சொல்லப்படுகிறது. அதை அரசு அதிகப்படுத்த ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. ந. இராசாங்கம்: ஒவ்வொரு மாவட்டத்திற்கும் இவ்வளவு வீடுகள் என்பதாக முன்கூட்டியே தீர்மானித்து விடுகிறார்கள். அந்த வீடுகளுக்கான தொகை ஒதுக்கப்பட்டுவிடுகிறது. சேலம் மாவட்டம் மட்டுமல்ல—ஒவ்வொரு மாவட்டத்திலும் இன்னும் அதிகம் வேண்டுமென்றுதான் கேட்கிறார்கள். இவை முடிந்தபின் அதையும் பரிசீலிக்கலாம்.

திரு. வ. முத்து: திருச்செங்கோடு உஞ்சனை கிராமத்தில் அரிசனங்களுக்காகக் கட்டப்படுகிற வீடுகள் எத்தனை ? அதன் மதிப்பு என்ன ?

மாண்புமிகு திரு. ந. இராசாங்கம்: திருச்செங்கோடு உஞ்சனை கிராமத்தில் 81 வீடுகள் கட்ட திட்டமிடப்பட்டிருக்கிறது.